# ஹிந்தி புகுத்தியதால்

## மாணவர்கள் ஆத்திரம்.

## 100 பேர் பள்ளிக்கூடம் மாற முடிவு.

(நமது நிருபர்)

காஞ்சிபுரம், மே. 27.

இவ்வூர் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலையிலிருந்து, பள்ளிக்கூட விடுமுறை நாட்களுக்குப் பிறகு, ஹிந்தி கட்டாயபாடத்தைக் கண்டிக்குமுகத்தான் 100 பிள்ளைகளுக்கு மேல் இதர பாடசாலைகளுக்கு மாற்றிக்கொண்டு போவர் என நம்பத்தக்க இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்திருக்கின்றன.

---

குறிப்பு:- தமிழ்நாட்டு மாணவ, மாணவிகளே! நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? தமிழன்னைக்கு ஏற்பட்டிருக்கும் மானபங்கத்தைப் பரிகரிக்க முயற்சி எடுக்கப் போகிறீர்களா? காஞ்சீபுரம் மாணவ மாணவிகளைப் பின்பற்றுவீர்களா?